# கோலாலம்பூரில் வரும் 2040ஆம் ஆண்டுக்குள்

# 762,500 வீடுகள் கட்டப்படும்

கோலாலம்பூர், ஆக. 6-

வரும் 2040ஆம் ஆண்டுக்குள் கோலாலம்பூர் மாநகர மன்றம் 762,500 வீடுகளை மக்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது என்று மாநகர மேயர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிப் கூறினார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு வரை மொத்தம் 500,803 வீடுகளை மாநகர மன்றம் வழங்கி இருக்கிறது. பொது வீடமைப்பு திட்டம் வழியாகவும் நியாய விலை வீடுகள் வழியாகவும் இந்த இலக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த 15 ஆண்டுகளில் கோலாலம்பூர் மாநகரில் பெருகும் மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதலான வீடுகள் கட்டப்படும் என்றார் அவர். இதில் பி40 அடித்தட்டு குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கும் எம் 40 நடுத்தர குடும்பங்களுக்கும் இந்த வீடுகள் வழங்கப்படும். இளைஞர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் நலனும் கருத்தில் கொள்ளப்படும்.

வேலை செய்யும் இளைஞர்களுக்கான திட்டங்களும் இளைய நிபுணர்களுக்கான திட்டங்களும் இதில் இடம் பெறும். கோலாலம்பூர் மாநகர மன்றம் வீடமைப்பு திட்டங்களுக்கான பல்வேறு வட்டாரங்களை அடையாளம் கண்டுள்ளது.

அதே போல நியாய விலை வீடுகளை கட்டும் இடங்களையும் அது கண்டுள்ளது. வீட்டின் விலை 3 லட்சம் வெள்ளிக்கும் குறைவாக இருப்பதை மாநகர மன்றம் உறுதி செய்யும். ரெசிடென்சி மடானி திட்டத்தின் கீழ் அதிக பட்சம் ஒரு வீட்டின் விலை 2 லட்சம் வெள்ளியாக இருக்கும். 800 சதுர அடி பரப்பளவில் அது அமையும் என்றார் அவர்.

